Date: 06.12.21.                    C.C.No. 548 /2009

அ.சா.3 ரவிச்சந்திரன் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

நான் அ.சா.1 ராமசாமிக்கு என்ன உறவு என்றால் மாப்பிள்ளை. அ.சா.1க்கு சொந்தமாக கரும்பு தோட்டங்கள் உள்ளது என்றால் சரிதான். அ.சா.2 ஆதி என்ன படித்திருக்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. கார்த்திகை மற்றும் மார்கழி மாதத்தில் மாலை 05.30 மணிக்கெல்லாம் இருட்டிவிடும் என்றால் சரிதான். பொதுவாக மேற்சொன்ன மாதங்களில் விவசாயிகள் வேலை முடித்துவிட்டு 5 மணிக்கெல்லாம் வீட்டிகு வந்துவிடுவார்கள் என்றால் சரிதான். கரும்பு தோகை ஒருவர்மீது உரசினால் இரத்தக்காயம் ஏற்படும் என்றால் லேசாக இரத்தக்காயம் ஏற்படும். 2 மற்றும் 8வது எதிரிகளான கார்த்திக், அமுதா இருவரும் மேலூரில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். மீனாட்சி மிசன் மருத்துவமனை எங்கள் ஊரில் கொட்டக்குடியில் உள்ளது என்றால் சரிதான். ராமசாமியை நான் மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன் என்றால் அம்பாசிடர் கார். யார் யார் வந்தோம் என்றால் நான், ராமசாமி, பாண்டி ஆகியோர்கள் வந்தோம். என்னை போலீசார் எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தனர் என்றால் என்னை விசாரிக்கவிலை. ராமசாமி என் உறவினர் என்பதால் இந்த வழக்கில் அவருக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.